டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 29.11.2025 சனிக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 133 - Madurai | Online Edition

# சென்னையில் இருந்து 510 கி.மீ. தொலைவில் புயல்


## வானிலை ஆய்வு மையம் தகவல்

சென்னை, நவ.28

சென்னைக்கு 510 கி.மீ தூரத்தில் தெற்கு திசையில் டிட்வா புயல் மையம் கொண்டுள்ளது. தென்மேற்கு வங்கக்கடல் மற்றும் அதனையொட்டிய இலங்கை கடலோர பகுதிகளில் நிலை கொண்டிருந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம், தீவிர காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்று நேற்று முன்தினம் காலை 11.30 மணியளவில் புயலாக வலுவடைந்தது.

இப்புயல் வடக்கு - வடமேற்கு திசையில் நகர்ந்து வருகிறது. இது வரும் 30ம் தேதி அதிகாலை வடதமிழகம், புதுச்சேரி மற்றும் அதனையொட்டிய தெற்கு ஆந்திர கடலோரப்பகுதிகளுக்கு அப்பால் உள்ள தென்மேற்கு வங்கக்கடல் பகுதியை அடையக் கூடும் என ஆய்வு மையம் கணித்துள்ளது.

வங்கக்கடலில் உருவாகியுள்ள இந்த புயலால் தமிழ்நாட்டுக்கு மழைக்கான வாய்ப்பு அதிகம் இருப்பதாகவே கணிக்கப் பட்டிருக்கிறது. அதிலும் தென் மாவட்டங்கள், காவிரி டெல்டா மாவட்டங்கள், வட கடலோர மாவட்டங்களில் நல்ல மழை பெய்யக்கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



# உயிரி பூச்சிக்கொல்லி பண்புடைய தாவரங்களான ஆடாதொடை மற்றும் நொச்சி கன்றுகள் விநியோகம்



சிவகங்கை, நவ.28

சிவகங்கை மாவட்டம், இளையான்குடி வட்டாரம், வேளாண் துறை மூலம் செயல்படுத்தப்படும் முதலமைச்சரின் மன்னுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டத்தின் (CMMKMKS-2025-26) உயிரி பூச்சிக்கொல்லி பண்புடைய தாவரங்களான ஆடாதொடை மற்றும் நொச்சி கன்றுகள் விநியோகம் செய்யப்படுகின்றன.

இயற்கை பூச்சி விரட்டிகன்றுகள் விநியோகம், ம.மதுரைசாமி, வேளாண்மை துணை இயக்குநர் (மாநிலத் திட்டம்), சிவகங்கை கலந்து கொண்டு முதலமைச்சரின் மன்னுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டத்தின் (CMMKMKS-2025-26) உயிரி பூச்சிக் கொல்லி பண்புடைய தாவரங்களான ஆடாதொடை மற்றும் நொச்சி கன்றுகள் விவசாயிகளுக்கு வழங்கினார். மு.தங்க பாண்டியன், வேளாண்மை உதவி இயக்குநர், இளையான்குடி, வேளாண்மைத் துறை திட்டங்கள் மற்றும் முதலமைச்சரின் மன்னுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டம் பற்றி விளக்கம் அளித்தார். N.கலைவாணி, வேளாண்மை அலுவலர், இயற்கை பூச்சி விரட்டி கன்றுகளை விவசாயிகள் பெறுவதன் மூலம், வேதிப்பொருள் பயன்பாட்டைக் குறைக்கவும், மண் ஆரோக் கியத்தை மேம்படுத்தவும் இந்த திட்டம் முயல்வதாக கூறினார்,

இயற்கை பூச்சி விரட்டி கன்று விநியோகத்தில் ச.பாரதி, உதவி வேளாண்மை அலுவலர், வேளாண் விரிவாக்கம், கலந்து கொண்டு இந்த மூலிகை தாவர கன்றுகள் இலவசமாக வேளாண் துறை மூலம் வழங்கப்பட்டு வருவதாகவும், ஆடா தொடா, நொச்சி, வேப்பங்கன்று ஆகியவற்றின் முக்கியத்துவம் மற்றும் பயன்கள் பற்றி விளக்கம் அளித்தார்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# காளான் சாகுபடி தொழில் நுட்பங்கள் குறித்த ஒரு நாள் இலவச பயிற்சி

சேலம், நவ.28

சேலம் மாவட்டம், சந்தியூர், வேளாண்மை அறிவியல் நிலையத்தில், வருகின்ற 5.12.2025 (வெள்ளிக்கிழமை) அன்று காளான் சாகுபடி தொழில் நுட்பங்கள் குறித்த ஒரு நாள் இலவச பயிற்சி காலை 10 மணி முதல் மாலை 4 வரை நடைபெற உள்ளது.

இந்த பயிற்சில் உணவு காளான் வகைகள், காளான் வளர்ப்பு தொழில்நுட்பங்கள், காளானில் உள்ள சத்துக்கள், உருளை படுக்கை தயாரித்தல், காளான் மதிப்புக்கூட்டுதல், காளான் வித்து தயாரிப்பு மற்றும் காளான் வித்து தயாரிப்பு பற்றிய விளக்கங்கள் அளிக்கப்பட உள்ளன.

பயிற்சியில் கலந்து கொள்வதற்கு முன்பதிவு அவசியம். முதலில் பதிவு செய்யும் 50 நபர்களுக்கு மட்டுமே பயிற்சியில் கலந்து கொள்வதற்கு அனுமதி வழங்கப்படும். விவசாயிகள், இளைஞர்கள் மற்றும் பெண்கள், இப்பயிற்சில் கலந்து கொண்டு பயன்பெறலாம் என்று திட்ட ஒருங்கிணைப் பாளர் இரா.ஜெகதாம்பாள் தெரிவித்துள்ளார்.

மேலும் விவரங்களுக்கு, திட்ட ஒருங்கிணைப்பாளர், வேளாண்மை அறிவியல் நிலையம், சந்தியூர், சேலம். 90955 13102, 90801 86667.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**






அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# கடலூர் மாவட்டம் வேளாண்மை அறிவியல் மையத்தில் டிசம்பர் மாதம் நடக்கவுள்ள பயிற்சி விபரங்கள்

| வ.எண். | தலைப்பு | நாள் |
|---|---|---|
| 1. | நெல்லில் பயிர் மேலாண்மை தொழில் நுட்பங்கள் சாத்தமங்களம் – **முஷ்ணம்** | 02.12.25 |
| 2. | மண்வள மேலாண்மை **இடம் – கே.வி.கே, விருத்தாசலம்** | 05.12.25 |
| 3. | எண்ணெய் வித்து பயிர்களில் மேம்படுத்தப் பட்ட விதை உற்பத்தி தொழில்நுட்பங்கள் **இடம் – கொளவாய்** | 06.12.25 |
| 4. | நெல்லில் அங்கக வேளாண்மை **இடம் – நந்தப்பாடி** | 09.12.25 |
| 5. | தக்காளியில் மதிப்புக்கூட்டுதல் மற்றும் சந்தைப்படுத்துதல் **இடம் – கே.வி.கே, விருத்தாசலம்** | 09.12.25 |
| 6. | மக்காச்சோளத்தில் படைப்புழு மேலாண்மை **இடம் – வள்ளிமதுரம்** | 10.12.25 |
| 7. | பலாவில் உற்பத்தி தொழில்நுட்பங்கள் மற்றும் மதிப்புக்கூட்டுதல் **இடம் – காடாம்புலியூர்** | 11.12.25 |
| 8. | நெற்பயிரில் உரம், களை மற்றும் நீர் மேலாண்மை **இடம் – சி. சாத்தமங்கலம்** | 12.12.25 |
| 9. | பயறு வகை பயிர்களில் மேம்படுத்தப்பட்ட விதை உற்பத்தி தொழில்நுட்பங்கள். **இடம் – சிறுகாலூர்** | 12.12.25 |
| 10. | இணை உணவுகள் தயாரித்தல் **இடம் – பெண்ணாடம்** | 16.12.25 |
| 11. | காய்கறி பயிர்களில் அங்கக வேளாண்மை **இடம் – பல்வராயநத்தம்** | 17.12.25 |
| 12. | உளுந்தில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை தொழில்நுட்பங்கள். **இடம் – எ. சித்தூர்** | 18.12.25 |
| 13. | பயறு வகை பயிர்களில் மேம்படுத்தப்பட்ட விதை உற்பத்தி தொழில்நுட்பங்கள் **இடம் – வடமூர்** | 20.12.25 |
| 14. | எண்ணெய் வித்துபயிர்களில் மேம்படுத்தப்பட்ட விதை உற்பத்தி தொழில்நுட்பங்கள் **இடம் – நாரையூர்** | 23.12.25 |
| 15. | பலாவில் உற்பத்தி மற்றும் மதிப்புக்கூட்டுதல் தொழில்நுட்பங்கள் | 26.12.25 |

அன்புடையீர்,

நமது 'அக்ரி டாக்டர்' மின்னிதழ் கடந்த 13 ஆண்டுகளாக மின் நாளிதழ் வடிவில் லட்சக்கணக்கான விவசாயிகள், வேளாண் துறை மாணவர்கள் ஆகியோருக்குத் தேவையான தகவல்களை செய்தி வடிவிலும், கட்டுரை வடிவிலும் வழங்கி வருகிறது. இதனால் பலனடைந்தோர் ஏராளம்.

வேளாண் துறை அதிகாரிகள், வேளாண் துறை வல்லுநர்கள், வேளாண் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், மத்திய, மாநில அரசுத் துறை அதிகாரிகள் ஆகியோர் விவசாயிகள், மாணவர்கள் பயனடையும் வகையில், பல்வேறு தகவல்களை செய்தி வடிவிலும் கட்டுரை வடிவிலும் அளித்து வருகின்றனர்.

இத் தருணத்தில், நமது 'அக்ரி டாக்டர்' மின்னிதழ், நூல் வடிவில் ஆண்டு மலரை வெளியிட முடிவு செய்துள்ளது. இந்த மலர் விரைவில் வெளியாகவிருக்கிறது. இந்த ஆண்டு மலரில் விவசாயம் தொடர்பான ஏராளமான கட்டுரைகள், விவசாயிகளின் அனுபவங்கள், வெற்றிக் கதைகள், சந்தித்த பிரச்சினைகள் உள்ளிட்டவை இடம்பெறவுள்ளன.





இந்த ஆண்டு மலர் வேளாண் துறை சார்ந்த மாணவர்களுக்கு பெரிதும் உதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே, இந்த ஆண்டு மலரை வாங்கி பயனடையுமாறு மாணவர்களுக்குப் பரிந்துரை செய்யும்படி தங்களை பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், இந்த மலர் ஆயிரக்கணக்கான விவசாயிகளைச் சென்றடையவுள்ளதால், தங்களது கல்லூரி / நிறுவனங்கள் தொடர்பான விளம்பரங்களை இந்த மலரில் அளித்து உதவும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள்
உண்மையுள்ள

ஆசிரியர் & வெளியீட்டாளர்
எம்.ஜெ.வாசுதேவன்

நன்றி

தொடர்புக்கு
+91 80563 05483
+91 9344811812

# நீடித்த நிலையான கரும்பு சாகுபடி (SSI) பயிற்சி




திருச்சி, நவ.28

திருச்சி மாவட்டம், கந்திலி வட்டாரம் கிழக்கு பதனவாடி கிராமத்தில் வேளாண்மை துறையின் மூலம் அட்மா திட்டத்தின் கீழ் விவசாயி களுக்கு அராட்சியில் நீடித்த நிலையான கரும்பு சாகுபடி (SSI) பற்றி பயிற்சி நடத்தப்பட்டது. இப்பயிற்சிக்கு ஊராட்சி மன்ற தலைவர் பெருமாள் கலந்து கொண்டு, வரவேற்பு அளித்தார்.

இப்பயிற்சிக்கு வேளாண்மை உதவி இயக்குநர் முனைவர் தமோதரன் தலைமை தாங்கினார். இப்பயிற்சியில் குழித்தட்டு முறையில் தயாரிக்கப்பட்ட ஒரு பரு நாற்று நடவு செய்தல், இயந்திர அறுவடை செய்தல், 5 அடி இடைவெளி விடுதல், இடைவெளியில் உளுந்து மற்றும் தட்டப்பயிறு ஊடுபயிர் சாகுபடி செய்வதன் மூலம் கூடுதல் வருமானம் பெறுதல்,உர தேவையை எவ்வாறு குறைத்தல், உரம் எவ்வாறு இடுதல், நுண்ணூட்டச் சத்து பயன்படுத்துதல், பயிரின் தேவைக்கு ஏற்றார் போல் நீர்பாசனம் செய்தல், உரம் மேலாண்மை ஆகியவற்றின் சிறப்பம்சங்களை விளக்கினார். மேலும் பூச்சி நோய் மேலாண்மையை பற்றி விரிவாக எடுத்துரைத்தார்.

கரும்பு பயிரில் சொட்டு நீர்பாசனம் அமைப்பதன் மூலம் பாசன நீரின் அளவை குறைப்பதோடு, திரவ உரங்களை சொட்டு நீர் மூலம் கரும்புக்கு அளிக்கலாம் என்பதை விளக்கினார். மேலும் கரும்பு பயிரில் சிறு குறு விவசாயிகளுக்கு 100% மானியத்திலும் இதர விவசாயிகளுக்கு 75% மானியத்திலும் சொட்டு நீர்பாசன வசதி செய்து தரப்படும் எனவும் தெரிவித்தார். துறையின் மூலம் செயல் படுத்தப்படும் மானிய திட்டங்களை பற்றி எடுத்துரைத்தார். மேலும் (FR) நில உடமைகளை பதிவு செய்யாத விவசாயிகள் பதிவு செய்து கொள்ள விழிப்புணர்வு ஏற்படுத்தினார். கந்திலி வேளாண்மை விரிவாக்க மையத்தில் தேவையான விதைகள் மற்றும் உயிர் உரம், நுண்ணூட்ட கலவை இருப்பு வைக்கப் பட்டுள்ளது. தேவைபடும் விவசாமிகள் பயன் பெறலாம் எனவும் எடுத்துரைத்தார். இப்பயிற்சிக்கு ஹினிசா வேளாண்மை கல்லூரி மாணவர் சுதாகர் உள்பட 40க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை உதவி தொழில்நுட்ப மேலாளர் ட.மணியரசு மற்றும் பெ.குமார் ஏற்பாடு செய்து இருந்தனர்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**—தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |
|---|---|---|---|---|

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS**
**LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

POWERGRID BHEL

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# புதுக்கோட்டை மாவட்டத்தில் உழவரைத் தேடி வேளாண்மை – உழவர் நலத்துறை திட்ட முகாம்



புதுக்கோட்டை, நவ.28

விவசாயிகளின் தேவைகளை கிராமங்களிலேயே பெற உதவும் உழவரைத் தேடி வேளாண்மை- உழவர் நலத்திட்ட முகாம்கள் புதுக்கோட்டை மாவட்டத்தில் 13 ஊராட்சி ஒன்றியங்களிலும் உள்ள 52 வருவாய் கிராமங்களில் 28.11.25 அன்று நடத்தப் பட்டது. இது குறித்து வேளாண்மை இணை இயக்குநர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், நடப்பு நிதியாண்டில் தமிழக அரசால் வேளாண்மை உழவர் நலத்துறையின் கீழ் உழவரைத் தேடி வேளாண்மை – உழவர் நலத்துறை – என்ற திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, கடந்த 29.05.25 அன்று தமிழக முதலைச்சரால் தொடங்கி வைக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள அனைத்து வருவாய் கிராமங்களிலும் உள்ள விவசாயிகளை சந்தித்து அந்தந்த கிராமங்களில் வேளாண்மை மற்றும் வேளாண் சார்ந்த சகோதர துறைகளை ஒருங்கிணைத்து முகாம்கள் நடத்த திட்டமிடப்பட்டது. அதன்படி, நவம்பர் மாதத்திற்கான இரண்டாவது முகாம் 28.11.25 அன்று 13 வட்டாரத்திலும் உள்ள 52 வருவாய் கிராமங்களிலும் நடைபெற்றது.

வேளாண்மை உழவர் நலத்துறையின் கீழ் இயங்கி வரும் அனைத்துத் துறைகளின் வட்டார அலுவலர்கள், சார்புத் துறைகளான கால்நடை பராமரிப்புத் துறை, கூட்டுறவுத் துறை, வேளாண் அறிவியல் நிலைய விஞ்ஞானிகள் ஆகியோர்களால், உழவர்களை அவர்களது வருவாய் கிராமங்களிலேயே நேரடியாக சந்தித்து அவர்களுக்குத் தேவையான ஆலோசனை களை வழங்குவதோடு, வேளாண்மையினை அடுத்த நிலைக்கு எடுத்துச் செல்லும் பயிர் சார்ந்த தொழில்நுட்பங்களையும், வேளாண்மை-உழவர் நலத்துறை மற்றும் சார்புத் துறைகளின் திட்டங்களையும் எடுத்துக் கூறி அவர்கள் பயன்பெறும் வகையில், தேர்ந்தெடுக்கப்பட்ட 26 கிராமங்களில் இந்த முகாம்கள் நடைபெற்றது.

## முகாமில் வழங்கப்பட்ட சேவைகள்

நவீன வேளாண் தொழில் நுட்பங்கள், உழவர் நலன் சார்ந்த இதர அரசு திட்டங்கள் பற்றிய தகவல்கள், உயிர்ம வேளாண்மை சாகுபடி குறித்த வழிகாட்டுதல்கள், உயிர்ம வேளாண்மைச் சான்று பெறுவதற்கான வழிமுறைகள், வேளாண் விளை பொருட்களை மதிப்புக்கூட்டுவதனால் ஏற்படும் நன்மைகள் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்துதல், மதிப்புக்கூட்டுப் பொருட் களை தயாரிப்பதற்கான வழிமுறைகள், அவற்றை சந்தைப் படுத்துவற்கான ஆலோசனைகள்/வழிகாட்டுதல்கள் வழங்குதல், வேளாண் பொருட்கள் ஏற்றுமதிக்கான ஆலோச னைகள் வழங்குதல், உழவர் நலன் சார்ந்த திட்டங்கள் மூலம் பயனடைய தேவையான பதிவுகள் மேற்கொள்ளுதல், கூட்டுறவு சங்கங் களில் பயிர் கடகள் பெற தேவையான உதவிகள்/ ஆலோ சனைகள் வழங்குதல், கால்நடைகளுக்கு ஏற்படும் பிரச்சனை களுக்கான ஆலோசனைகள், பண்ணை இயந்திர கருவிகள் வாங்குதல் மற்றும் வாடகைக்கு பெறுவதற்கு தேவையான உதவிகள் வழங்குதல் ஆகிய சேவைகள் வழங்கப்பட்டது.

இம்முகாம்கள் 28.11.25 அன்று அன்னவாசல் வட்டாரத்தில் உள்ள இடையப்பட்டி கிராமத்தில் வேளாண்மை துணை இயக்குநர் (உபநி), சி.ஜெயபாலன், தலைமையில் இந்த முகாம் நடத்தப்பட்டது. இதே போல் மற்ற வட்டாரங்களில் சிறுவயல், குறிச்சிப்பட்டி, நொடியூர், தச்சங்குறிச்சி, செரியலூர் இனாம் 2 பிட், விஜயரெகுநாதபுரம், கறம்பக்குடி, திருமணஞ்சேரி, பஞ் சாத்தி, ஆளப்பிறந்தான், ஈச்சங்குடி, வாட்டாத்தூர், மேலஸ் தானம், கண்டனிவயல், விராச்சிலைபிட் -1, விராச்சிலைபிட் -2, வலையம்பட்டி, பூவம்பட்டி, வெள்ளக்குடிபிட்- 1, காரையூர், கடம் பராயப்பட்டி, நீர்பழனி, வெம்மணி, வைத்தூர், சாத்தினிப்பட்டி, ஆகிய கிராமங்களில் வேளாண்மை உதவி இயக்குநர்கள் தலைமையில் ஒரு முகாமும், தென்னதிரையான்பட்டி, அய்யா வயல், மஞ்சபேட்டை, அரியாணிப்பட்டி, கோவிலூர் தேவஸ் தானம், லட்சுமிநரசிம்மபுரம், வலங்கொண்டான்விடுதி, நெய் வத்தலி, சாத்தனேந்தல், அதிரான்விடுதி, தக்கடிவயல், வெளுவூர், வெள்ளூர், கூத்தங்குடி, அரசாந்தம்பட்டி, பிலாக் குடிப்பட்டி, மதகம், தானிக்காடு, வெள்ளக்குடி பிட்-2, சேரனூர், கதவம்பட்டி, தளிஞ்சி, மேட்டுப்பட்டி, சிவகாமிபுரம், நரங்கியன் பட்டி, மூட்டாம்பட்டி ஆகிய கிராமங்களில் தோட்டக்கலை உதவி இயக்குநர்கள் தலைமையில் ஒரு முகாமும் ஆக மொத்தம் 52 கிராமங்களிலும் இந்த முகாம்கள் நடத்தப்பட்டது.

# திண்டிவனம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் வருடாந்திர விதைத் திருவிழா – 2025



விழுப்புரம், நவ.28

விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில், வருடாந்திர விதை திருவிழா 27.11.25 அன்று நடைபெற்றது.

இவ்விழாவில் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் திருவரசன் வரவேற்புரை யாற்றினார், இதில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தின் விதை மைய இயக்குனர் முனைவர் உமாராணி, தலைமையேற்று சிறப்புரையாற்றினார். மேலும் விழுப்புரம் மாவட்ட இணை இயக்குனர் சீனிவாசன் வாழ்த்துரை வழங்கினார். அவர் கூறுகையில் விதை தேவை அதிகமாக இருப்பதால் விவசாயிகள் விதை உற்பத்தியாளர்களாக மாற வேண்டும் என சிறு வேண்டுகோள் விடுத்தார். மேலும் விதை ஆய்வு துணை இயக்குனர் சரவணன், விதை தரக்கட்டுப் பாட்டிற்கான விதை சட்டங்கள் குறித்து எடுத்துரைத்தார். விதை சான்று மற்றும் உரிமச் சான்றளிப்பு உதவி இயக்குனர் பாபு, விதை உற்பத்திமுறைகள் குறித்து விளக்கமளித்தார். விதை ஆய்வாளர் ஜோதிமணி, இவ்விழாவில் பங்கேற்று விதை சான்று அட்டைகளின் முக்கியத்துவம் குறித்து உரையாற்றினார்.

விதை அமிர்தம் கொண்டு விதை நேர்த்தி செய்வதன் முக்கியத்துவம் மற்றும் பயிர் வளர்ச்சி குறித்து விவசாயிகளுக்கு விதை மைய பேராசிரியர் முனைவர் ராஜா எடுத்துறைத்தார். விதை வணிகம் குறித்து வேளாண் விரிவாக்க கல்வி இயக்குன ரகத்தின் பேராசிரியர் முனைவர் கதிரவன் விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

மேலும் இவ்விழாவின் ஒரு அங்கமான கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில் விதை சம்பந்தப்பட்ட 20க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் பங்கு பெற்றனர். குறிப்பாக அறுபது பாரம்பரிய நெல் இரகங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தது.

சின்ஜண்டா, பேயர், நாம்தாரி மற்றும் நுண்நிம்ஸ் விதை நிறுவனங்கள் பங்கு பெற்று அவர்களது விதைகள் காட்சிப் படுத்தப்பட்டது. நடமாடும் மண்பரிசோதனை வாகனம் கொண்டு விவசாயிகளின் மண் மற்றும் நீர் மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டு ஆலோசனை வழங்கப்பட்டது. அறிவியல் நிலைய விஞ்ஞானிகள் கலந்து கொண்டு விவசாயிகளிடம் கலந்துரை யாடினர்கள். முனைவர் விஜயகீதா, தொழில்நுட்ப வல்லுநர் (விதை அறிவியல்) நன்றி உரையாற்றினார். இந்நிகழ்வில் நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.



# விதைச்சட்ட முன்வரைவு மசோதா 2025 - ஒரு பார்வை




மத்திய அரசு தாக்கல் செய்திருக்கும் விதைச்சட்ட முன்வரைவு மசோதா 2025 இன்றைக்கு உழவர்கள் மத்தியில் ஒரு பேசும் பொருளாக உள்ளது. அப்படி என்ன இருக்கு? என்பதை விரிவாக பார்ப்போம்.

விதை 2025 (SEED BILL) என்பது விவசாயத்தில் விதை வினியோகம் மற்றும் பதிவுகளை ஒழுங்குபடுத்துவதற்காக, மத்திய அரசால் முன்மொழியப்பட்ட விதை சட்ட முன்வரைவு மசோதா. நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு விரைவில் சட்டமாக நிறைவேற்ற பட உள்ளது.

35 பக்கங்களில் இந்த வரைவு (BILL DRAFT) தயாரிக்கப் பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. விதைகளை மத்திய அரசு மாறுபட்டு பார்க்கிறது என விவசாயிகள் தெரிவிக் கின்றனர். விதை என்பது ஒரு இனப்பெருக்க பண்டமாக ( PROPAGATING MATERIAL) மத்திய அரசு பார்க்கிறது. இனிமேல் பெரிய நிறுவனங்களின் கட்டுபாட்டிற்கு வழிவகுத்து, சிறு, குறு விவசாயிகளுக்கு எதிராக இருப்பதாக வேளாண் ஆர்வலர்கள் கவலை கொள்ளுகின்றனர்.

**இதற்கு முன்பாக என்னென்ன விதை சட்டங்கள் அமலில் உள்ளன?**

விதைச்சட்டம் 1966 மற்றும் விதைகள் (கட்டுபாடு) ஆணை 1983. இந்த சட்டத்திற்கு மாற்றாக விதைத்தரம் ஆகிய வற்றிற்கும் மாற்றாக இந்த சட்டமுன் வரைவு 2025 நோக்கமாக உள்ளது.

**வரைவு சட்டத்தில் என்னென்ன விதிகள் உள்ளன? தெரியுமா?**

1) பராம்பரிய விதைகள், மரபு விதைகள் உட்பட எல்லா விதை களையும் விற்பனை செய்ய வேண்டுமானால் கட்டாயமாக பதிவு செய்ய வேண்டும். சிறு, குறு விவசாயிகளால் முடியாத நிலை. பதிவு செய்யாமல் உழவர் தனது விதையை விற்பனை செய்தால் சட்டபடி குற்றமாகும்.

2) இனி விதைக்காக விவசாயிகள் பெரிய பெரிய நிறுவனங் களிடமே வாங்கும் சூழல் உருவாகும்.

3) வணிக சின்னங்கள் பொறிக்கப்பட்ட விதைகளை பதிவின்றி விற்பனை செய்யக்கூடாது.

4) விவசாயிகள் விதை உற்பத்தி செய்யலாம், பரிமாறி கொள்ளலாம், சட்டபடி சந்தையில் விற்க முடியாது. மொத்த மாகவோ, சில்லறையாகவோ விற்பனை செய்ய முடியாது.

5) விதை பதிவு செய்வதற்கு அதிக கட்டணம் (15000-50000) ஆகலாம்.

6) பதிவு செய்யாத விதையை யாரும் விதைக்க முடியாது.

7) விதைகளின் QUALITY STANDARDS) PURITY தரம் மேம்படுத்தப்படும்.

8) அதிகளவில் விதைபரிசோதனை ஆய்வுக்கூடம் (STL)

9) விதைகளால் தவறு கண்டுபிடிக்க படின் அதிகளவிலான பைன் (PENALTIES) 30 லட்சம் / 3 ஆண்டு ஜெயில் தண்டனை உண்டு.

10) SEED TRACEABILITY - SATHI PORTAL மூலமாக கண்டறியப்படும்.

இந்த சட்ட வரைவு விதையை முற்றிலும் மத்திய அரசின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு செல்லுகிறது.

இனிமேல் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் கூட (ய்ணுநு) பதிவு செய்யாமல் விதைகளை உற்பத்தி செய்து விற்பனை செய்யக்கூடாது.


**விவசாயிகளின் எதிர்பார்ப்பு?**

இந்த மசோதா விவசாயிகளின் அடிப்படை உரிமையான விதைகளை பாதுகாக்க வேண்டும், அத்துடன் தற்சார்பு நிலை அடைய வேண்டும்.

எக்காரணம் கொண்டு விதைகளுக்காக விவசாயிகள் யாரிடம் கையேந்தக்கூடாது என்பதே.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

தலைக் கவசம் உயிர்க் கவசம்
முறையாக தலைக் கவசம் அணிவோம்


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# வேர் முடிச்சு நூற்புழு, மெலாய்டோகைன் கிரேமினிகோலா

● **விருந்துயிரி** : தக்காளி, கத்தரி, மிளகாய்,வெண்டை, புடலைங்காய்

**அறிகுறிகள்**

● வேர் முடிச்சுகள் – புடலைக்காயில் பெரிய முடிச்சுகளும், இதர காய்கரிகளில் உறுதியான பெரிய முடிச்சுகளும், மிளகாயில் சிறிய முடிச்சுகளும் காணப்படும்.

● அதிகம் தாக்குண்ட நிலையில் செடிகளின் இலைகள் வெளிறியும் வளர்ச்சி குன்றியும் காணப்படும்.

● பாதிக்கப்பட்ட நாற்றுக்கள் வாடிக் காய்ந்து விடும்.

● தப்பிப் பிழைக்கும் தாவரங்களில் பூக்கள் மற்றும் பழங்களின் உற்பத்தி வெகுவாக குறைகிறது.

● மெலாய்டோகைன் நூற்புழு, கேரட் போன்ற பயிர்களின் வேர் மற்றும் கிழங்குகளில் தரம் மற்றும் விளைச்சளின் அளவை குறைத்து, அதன் சந்தை மதிப்பையும் குறைக்கிறது.



**பூசணியின் வேர்**



**பாதிக்கப்பட்ட மிளகாய் நாற்றுகல்**

**கட்டுப்பாடு**

● நாற்றங்காலில், சூடோமோனாஸ் புளூரசன்ஸ் ஒரு சதுர மீட்டருக்கு 10 கிராம் இடவும்.

● எதிர்ப்புத்திறன் கொண்ட பயிர் வகைகளைக் கொண்டு பயிர் சுழற்சி செய்யவும்.

● களைகளைக் கட்டுப்படுத்தவும்.

● அறுவடைக்கு பின் வேர் முடிச்சுகள் கொண்ட வேர்களை முழுவதுமாக அப்புறப்படுத்தவும்.

● கோடை காலத்தில் நிறமற்ற பாலிதீன் விரிப்புகளைப் பரப்பி மண் வெப்பமூட்டல் மேற்கொள்ளலாம்.

● கார்போபியூரான் 3ஜி மருந்தினை எக்டர் ஒன்றுக்கு 33 கிலோ இடவும்.

தகவல் : **பசுபதி இ, உதவிப் பேராசிரியர் (வேளாண் பூச்சியியல் துறை), ஜெயமுருகன் செ, உதவிப் பேராசிரியர் (பயிர் நோயியல் துறை), கிருஷ்ணா வேளாண் மற்றும் தொழில்நுட்ப கல்லூரி, ஸ்ரீரெங்கபுரம், மதுரை-625 532.**

# குடுமியான்மலை உழவர் பயிற்சி நிலையம் மூலம் கிராம அளவிலான விவசாயிகள் பயிற்சி

புதுக்கோட்டை, நவ.28

புதுக்கோட்டை மாவட்ட குடுமியான்மலை உழவர் பயிற்சி நிலையம் மூலமாக 2025-26 ஆம் ஆண்டிற்கான கிராம அளவிலான விவசாயிகள் பயிற்சி, கறம்பக்குடி வட்டாரத்தில் நடைபெற்றது. இப்பயிற்சியில் வேளாண்மைத் துறை, தோட்டக் கலைத் துறை மற்றும் வேளாண் விற்பனை மற்றும் வணிகத் துறை அலுவலர்கள் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு பயிற்சியளித்தனர்.






இப்பயிற்சியில் உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை அலுவலர் ந.சண்முகி, மண் மாதிரி எடுத்தல், மண் வள மேலாண்மை, பசுந்தாள் உரங்கள், விதை நேர்த்தி, நெற்பயிர்களை தாக்கும் பூச்சிகள் மற்றும் தடுப்பு முறைகள், நோய் மேலாண்மை குறித்து விரிவாக எடுத்துரைத்தார். கறம்பக்குடி வட்டார வேளாண்மை அலுவலர் க.நஷ்ரின் நிலோபர் நிா, மழை காலங்களில் பயிர்களில் ஏற்படும் சேதங்கள், அதை நிவர்த்தி செய்யும் பாதுகாப்பு முறைகள், துறை ரீதியான திட்டங்கள் மற்றும் மானியங்கள் குறித்து எடுத்துரைத்தார்.

இதை தொடர்ந்து துணை வேளாண்மை அலுவலர் ஆர்.கே. சரவணன், பயறுவகை சாகுபடி தொழில்நுட்பங்கள், பயிர் காப்பீடு மற்றும் வேளாண் அடுக்குத் திட்டம் குறித்து எடுத்துரைத் தார். வேளாண் விற்பனை மற்றும் வணிகத் துறையிலிருந்து ஒழுங்குமுறை விற்பனை கூட கண்காணிப்பாளர், சரண்யா, வேளாண் உட்கட்டமைப்பு நிதியின் கீழ் கடன் வசதி பெறுதல், கலம் அமைத்தல், உழவர் சந்தையில் வேளாண் பொருட்களை விற்பனை செய்வது, கடன் பெறுதல் பற்றி விரிவாக எடுத்து கூறினார். இந்த பயிற்சியின் முடிவில் புதிதாக வெளியிடப்பட்ட தானியம், பயறு வகை பயிர்கள் மற்றும் எண்ணை வித்துப்பயிர் ரகங்கள், மண் வளம், பயிர் பாதுகாப்பு குறித்த தொழில்நுட்ப கையேடு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. இப்பயிற்சிக்கான முன்னேற்பாடுகளை வட்டார தொழில்நுட்ப மேலாளர் கோ.மணி மேகலை செய்திருந்தார், இப்பயிற்சியின் முடிவில் கறம்பக்குடி வட்டார உதவி தொழில்நுட்ப மேலாளர் வீரமணி நன்றி கூறினார்.



# வேளாண்மையில் நுண்ணுயிர் உரங்கள் – ஒரு பார்வை

ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மையில் உயிர் உரங்களின் பயன்பாடு என்பது மிகவும் முக்கியமான ஒன்றாக திகழ்கிறது. இது மண்ணில் உள்ள ஊட்டச்சத்துக்களின் சுழற்சிக்குப் பெரும் ஆதாரமாக விளங்குகிறது. பொதுவாக வளி மண்டல தழைச்சத்தைக் கிரகித்து மண்ணில் நிலை நிறுத்தும்




பாக்டீரியாக்கள், மண்ணில் கிடைக்காத நிலையில் உள்ள, மணி மற்றும் சாம்பல் சத்துக்களைக் கரைத்துப் பயிருக்கு அளிக்கும் பாக்டீரியாக்கள், பயிரின் வளர்ச்சியை ஊக்குவிக்கும் நுண்ணுயிரிகள் என உயிர் உரங்கள் பல வழிகளில் வகைப்படுத்தப் படுகிறது. இயற்கையிலேயே, மண்ணில் அநேக நன்மை தரும் நுண்ணுயிர்கள் உள்ளன. பயிர்கள் மண்ணிலிருந்து ஊட்டச் சத்துக்களை நுண்ணுயிரிகள் உதவியுடன் எளிதில் எடுத்துக் கொள்கிறது.



**ரைசோபியம் பாக்டீரியா**

இது பயறு வகைத் தாவர வேர்களில், வேர் முடிச்சுகளைக் உருவாக்குகிறது. இந்த வேர் முடிச்சு பயறு வகைகளுக்குத் தேவையான நைட்ரஜன் சத்தை வளிமண்டலத்தில் இருந்து இழுத்து தாவரங்களுக்குக் கொடுத்து வளப்படுத்தும். ரைசோ பியம் பாக்டீரியா பல சிற்றினங்களைக் கொண்டுள்ளது. ஒவ்வொன்றும் ஒவ்வொரு பயறு வகைத் தாவரத்தில் வேர்முடிச்சுளை உருவாக்குகின்றன.

| | |
|---|---|
| பட்டாணி, காராமணி, கொண்டைக் கடலை, உளுந்து, துவரை, வேர்க்கடலை | ரைசோபியம் லெகுமினோஸரம் (Rhizobium leguminosarum), |
| சோயா பீன்ஸ் | ரைசோபியம் ஜப்பானிக்கம் (Rhizobium japonicum), |
| லுப்பின் பீன்ஸ் | ரைசோபியம் லுப்பினி (Rhizobium lupini) |
| அவரை வகை | ரைசோபியம் பேசோலி (Rhizobium phaseoli). |

காற்றில் நைட்ரஜன் நிறைந்துள்ளது. இது தாவர வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றுகிறது. இருப்பினும், தாவரங்கள் நைட்ரஜனை நேரடியாகப் பெற முடியாது என்பதால் ரைசோபியம் பாக்டீரி யாக்கள் வளிமண்டல நைட்ரஜனை (N2) அமோனியாவாக (NH3) மாற்றுகிறது. இது தாவரம் உடனே உறிஞ்சக்கூடிய நைட்ரஜன் ஆகும். ரைசோபியத்தால் உற்பத்தி செய்யப்படும் அதிகப்படியான அமோனியாவானது, மண்ணை வளப்படுத்து கிறது. எதிர்கால மண் வளர்ச்சிக்கு ஆதரவாக ஆக்குவதோடு, ஆரோக்கியமான, செழிப்பான சுற்றுச்சூழல் அமைப்பையும் உருவாக்குகிறது. ஒரு வருடத்தில் ரைசோபியம் பாக்டீரியாக்கள் ஹெக்டேருக்கு 400 கிலோ கிராம் நைட்ரஜனை மண்ணில் நிலை நிறுத்தும் திறன் கொண்டது.

**அசோஸ்பைரில்லம்**

இது அசோஸ்பைரில்லம் (Azospirillum) பாக்டீரியா வகையைச் சார்ந்த ஒரு நுண்ணுயிரி ஆகும். மண்ணில் வாழும் இந்நுண்ணுயிரி காற்றிலுள்ள தழைச்சத்தை ஈர்த்து நிலை நிறுத்தி நெற்பயிருக்கு அளிக்கவல்லது. இது காற்றிலுள்ள தழைச்சத்தைக் கிரகித்து 'இணைகூட்டு வாழ்' முறையில் நெற்பயிரின் வேர் மற்றும் வேர் சூழ் மண்டலத்தில் செயல் படுகிறது. இதனால் பயிர்களுக்கு சிபாரிசு செய்யப்படும் தழைச் சத்து அளவில் 20 முதல் 40 சதவீதம் வரை குறைத்துக் கொள்ள முடியும். இந்த வகை நுண்ணுயிரானது பயிர் வளர்ச்சிக்கு தேவையான சில வளர்ச்சி ஊக்கியையும் உற்பத்தி செய்கிறது. மகசூலை அதிகரிப்பதுடன், வறட்சியைத் தாங்கும் திறனையும் பயிர்களுக்கு கொடுக்கிறது.

**அசட்டோபாக்டர்**

இது தன்னிச்சையாக வாழும். காற்றில் உள்ள தழைச்சத்தை நிலைப்படுத்துகிறது. இது உயிர் உரமாக பயிறு வகை அல்லாத பயிர்களுக்கு முக்கியமாக நெல், பருத்தி, காய்கறி மற்றும் பல பயிர்களுக்கு பயன்படுத்தப்படுகிறது. அசட்டோபாக்டர் உயிரணுக்கள் வேர்சூழ் மண்டலத்தில் அதிகளவில் இருக்கும்.

**பாஸ்போபாக்டீரியா (Phosphobacteria)**

இது மண்ணில் உள்ள கரையாத பாஸ்பேட்டுகளை, பயிர்கள் எளிதாகப் பயன்படுத்தக்கூடிய வடிவத்திற்கு மாற்ற உதவும், பாஸ்பேட்டை கரைக்கும் திறன் கொண்ட நுண்ணுயிரிகளாகும். பாஸ்போபாக்டீரியா, பயிர்கள் செழித்து வளர உதவும், ஊட்டச்

சத்துக்களை உறிஞ்சுவதற்கு அவசியமான பாஸ்பரஸ் சத்தை வழங்குகிறது. மண்ணில் உள்ள கரையாத பாஸ்பேட், பயிர் களுக்குக் கிடைப்பதில்லை. பாஸ்போபாக்டீரியா, இந்த கரை யாத பாஸ்பேட்டை கரையக்கூடிய வடிவத்திற்கு மாற்றி, பயிர்கள் எளிதாக உறிஞ்சுவதற்கு உதவுகிறது. பயிர்களின் வளர்ச்சியை மேம்படுத்துகிறது. பாஸ்பரஸ் சத்து, பயிர்களின் வேர் வளர்ச்சி, பூக்கும் மற்றும் காய்க்கும் திறனை மேம்படுத்துகிறது.

**பொட்டாஷ் திரட்டும் பாக்டீரியா**

பொட்டாஷ் மொபிலைசிங் பாக்டீரியா, சாம்பல் சத்தை எடுத்துக் கொடுக்கும் ஃபிரசூரியா ஆரன்சியா என்னும் நுண்ணுயிரி ஆகும். இந்த பாக்டீரியா மண்ணில் உள்ள சிலிக்கான் சத்தைக் கரைக்கிறது. அப்போது சாம்பல் சத்தும் தானாக கரைந்து வெளியாகிறது.

**ஜிங்க் சால்யுபிலைசிங் பாக்டீரியா**

துத்தநாகச் சத்தைக் கரைத்துக் கொடுக்கும் பேசில்லஸ் இனத்தைச் சேர்ந்த நுண்ணுயிரிகளின் கலவை ஆகும். மண்ணில் பல்வேறு கரையாத நிலைகளில் உள்ள துத்தநாகச் சத்தைக் கரைத்து கொடுக்கிறது. ஜிங்க் சல்பேட் உரத்தை பயிர்களுக்கு இடும் போது அதில் பாதியளவு கரையாமல் ஜிங்க் ஆக்சைடாகவும் ஜிங்க் கார்பனேட் ஆகவும் மாறுகிறது. இதை தாவரங்கள் மண்ணிலிருந்து எடுத்துக் கொள்ள முடியாது. இந்த சத்துகளை கரைத்து பயிர்களுக்கு தருவதற்கு ஜிங்க் சால்யுபிலைசிங் பாக்டீரியா உதவுகிறது.

**செறிவூட்டப்பட்ட மக்கிய உரங்கள் தயாரிக்க**

பண்ணைக் கழிவுகள் அளவில் அதிகமாகவும், குறைந்த சத்துக்களையும் கொண்டு இருக்கும். ஆகையால் பல்வேறு இடங்களில் இருந்து சேகரிக்கப்படும் பண்ணைக் கழிவுகளை, கிளிரீசிடியா, அகத்தி போன்ற பசுந்தாள் இலைகள், மாட்டுச் சாணம் மற்றும் கோமியம், நுண்ணுயிர் கலவைகள் ஆகிய வற்றைப் பயன்படுத்தி மக்கச் செய்து, பிறகு செறிவூட்டிப் பயன் படுத்தலாம். இதற்கு நன்மை தரக்கூடிய நுண்ணுயிரிகளை அசடோபாக்டர், அசோஸ்பைரில்லம், சூடோமோனஸ், பாஸ்போ பேக்டீரியா (0.2 சதவீதம்) மற்றும் ராக் பாஸ்பேட் 2 சதவீதம்), சாம்பல் (2 சதவீதம்) போன்ற உயிர் உரங்களை ஒரு டன் மக்கிய உரத்துடன் கலந்து, நிழலில் கடினமான தரையில் குவித்து, 40% ஈரப்பதத்தில் 20 நாட்கள் அப்படியே வைத்திருக்க வேண்டும்.

இதனால் இதில் கலக்கப்பட்ட நுண்ணுயிரிகளின் எண்ணிக்கை அதிகபட்ச வளர்ச்சியை அடைவதோடு, அனைத்துச் சத்துக்களும் பயிர் எடுத்துக் கொள்ள ஏதுவான வகையில் மாற்றப்படும். மேலும், இவற்றில் உள்ள நொதிகள் மற்றும் அமிலங்கள் பயிரின் வளர்ச்சியைத் தூண்டுவதற்கும் உதவும். செறிவு மிக்க புண்ணாக்கு வகைகளை மக்கிய தொழு உரம் மற்றும் உயிர் உரங்களுடன் சேர்த்துச் செறிவூட்டப்பட்ட உரங்களாக மாற்றிப் பயன்படுத்தும்போது, கொழுப்புப் பொருட் களில் எண்ணெய் சிதைவுறுதலும் விரைவாக நடந்து, பயிருக்குக் கிடைக்கும் சத்துக்களும் அதிகரிக்கும். இரும்பு, மாங்கனீசு மற்றும் துத்தநாகம் போன்ற நுண்ணூட்ட சத்துக்கள் தாவர ஆரோக்கியத்திற்கு மிக அவசியமாகும். ஆனால் மேற் காணும் ஊட்டச்சத்து மேலாண்மை முறைகளை கடைப்பிடிக்கும் போது தேவையான அளவு நுண்ணூட்டச் சத்துகள் பயிர் களுக்குக் கிடைப்பதோடு கரிமப் பொருளின் அளவும் சீராக நிர்வகிக்கப்பட்டு இவற்றின் குறைபாடுகளால் பயிர்களுக்கு ஏற்படும் பாதிப்புகளும் தவிர்க்கப்படும்.

## திரவ உயிர் உரம் பயன்படுத்தும் அளவு

நுண்ணுயிர்களை ஆய்வுக்கூடத்தில் பெருக்கம் செய்து, அதை நிலத்தில் உபயோகிக்கும் வகையில் கலவைகளுடன் சேர்த்து உயிர் உரங்களாக திட மற்றும் திரவ வடிவில் கிடைக்கிறது. உயிர் உரங்களை விதை நேர்த்தி செய்தும், நாற்று வேர்ப்பகுதி நேர்த்தி செய்தும், மண்ணில் நேரடியாக இட்டும், நீர்ம உரமாகப் பயன்படுத்தியும் பல வகைகளில் பயன்படுத்தலாம்.

- விதை நேர்த்தி செய்வதற்கு ஒரு ஏக்கர் விதைக்கு 50 மி.லி.
- நாற்று நனைத்து நடுவதற்கு ஒரு ஏக்கருக்கு 150 மி.லி.
- நிலத்தில் நேரடியாக இடுவதற்கு ஒரு ஏக்கருக்கு 200 மி.லி
- சொட்டுநீர் பாசனம் மூலமாக இடுவதற்கு ஒரு லிட்டர் நீரில் ஒரு மி.லி. திரவ உயிர் உயிர் உரத்தினை கலந்து இடலாம்.



### பயன்படுத்தும் முறை

- உயிர் உரங்களை கொண்டு விதை நேர்த்தி முறையில், ஒரு ஹெக்டேருக்குத் தேவையான விதைகளை 125 மில்லி லிட்டர் அளவுள்ள நுண்ணுயிர் உரங்களான அசோஸ்பைரில்லம், ரைசோபியம், பாஸ்போ பாக்டீரியா, பொட்டாஷ் பாக்டீரியா மற்றும் துத்தநாக பாக்டீரியா ஆகியவற்றை அரிசி கஞ்சியுடன் கலந்து அனைத்து விதைகளிலும் பரவும் வண்ணம் விதை நேர்த்தி செய்து, 30 நிமிடம் நிழலில் உலர்த்தி விதைக்க வேண்டும்.

- நாற்று நனைத்தல் முறையில் பரிந்துரைக்கப்பட்ட நுண்ணுயிர் உரங்களை தலா 400 மில்லி லிட்டரை (திரவ வடிவம்), வயலில் சிறு பாத்தி அமைத்து 40 லிட்டர் தண்ணீரில் கலந்து நாற்றுகளின் வேர்ப் பகுதி நன்கு நனையும்படி 30 நிமிடம் நனைத்து பின்பு நடவு செய்ய வேண்டும்.

- மண்ணில் இடுதல் முறையில், அசோஸ்பைரில்லம், பாஸ்போ பாக்டீரியா மற்றும் பொட்டாஷ் பாக்டீரியா ஆகிய நுண்ணுயிர் உரங்களை தலா 500 மில்லி லிட்டர் (திரவ வடிவம்) மற்றும் 25 கிலோ தொழு உரம் அல்லது மணலுடன் கலந்து கடைசி உழவுக்கு முன்பு சீராக வயலில் இடவேண்டும்.

அனைத்து வகையான உயிர் உரங்களும் 50% மானியத்தில் அனைத்து வேளாண்மை விரிவாக்க மையத்தில் கிடைக்கின்றன. விவசாயிகள் மானிய விலையில் பெற்று பயன் பெறலாம்.

தொகுப்பு : **கா.அரிபுத்திரன், வேளாண்மை அலுவலர், உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகம், விருதுநகர். தொடர்புக்கு : 82480 80922.**

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**



# Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்**
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW · isha · POWERGRID · BHEL

**Office**
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

**Factory**
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# தமிழ்நாட்டில் உள்ள 4 முக்கிய அணைகளை தூர் வாரி கொள்ளளவை உயர்த்த நீர்வளத்துறை திட்டம்



சென்னை, நவ.28

தமிழ்நாட்டில் உள்ள 4 முக்கிய அணைகளை தூர் வாரி கொள்ளளவை உயர்த்த நீர்வளத்துறை திட்டமிட்டுள்ளது. மேட்டூர், வைகை, அமராவதி உள்ளிட்ட 4 முக்கிய அணைகளை தூர்வாரி கொள்ளளவை உயர்த்த திட்டமிட்டுள்ளது.

அணைகளை தூர்வார சுற்றுச் சூழல் அனுமதி கோரி விண்ணப்பத்தை நீர்வளத்துறை சமர்ப்பித்தது. சுற்றுச் சூழல் அனுமதி கிடைத்தவுடன் அணைகளை தூர்வாரும் பணி தொடங்கப்படும் என நீர்வளத்துறை அதிகாரிகள் தகவல் தெரிவித்துள்ளனர்.




ஜெயின் நாற்றுகள்
சிறந்த மகசூல் - அதிக லாபம்
Jain Seedlings
PAPAYA
பப்பாளி
Rs. 16/-
ஒரு நாற்றின் விலை
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக.(உடுமலையிலிருந்து)
ரெட் லேடி
தைவான் 786
முன்பதிவு செய்வதற்கு
இன்றே அழையுங்கள்:
94425 02396